## திண்டுக்கல் மண்டல தலைமை வனப்பாதுகாவலரின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர் திரு வே.திருநாவுக்கரசு, இ.வ.ப.,
## தலைமை வனப்பாதுகாவலர்

* * *

செ.மு.ஆ.எண் 10476/2018 ப1 நாள். 14.10.2019.

பொருள் : பணி – நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற தேர்வில் (தொகுதி-IIA) (2017 - 2018) – திரு. எஸ். ஜனார்த்தனன், உதவியாளராக தெரிவு செய்யப்பட்டது – உதவியாளராக பணியில் சேர்ந்தது – பணியினை வரன்முறைப்படுத்துவது – தொடர்பாக.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண். 6021/PSD-D/2018, நாள். 01.11.2018.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை. ந.க எண்.ண2/ 37899/2018 நாள். 12.11.2018.
3. தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல், ப.ஆ.எண் 56/18/ப1 [ந.க.எண். 10476/18], நாள். 26.11.2018.

*****

திரு. எஸ். ஜனார்த்தனன், உதவியாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம், நேரடி உதவியாளராகத் தேர்வு செய்யப்பட்டு பார்வை-2ல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கடிதத்தின் மூலம் உதவியாளராக திண்டுக்கல் மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-3ல் காணும் தலைமை வனப்பாதுகாவலரின் பணியாணைப்படி திண்டுக்கல், சமூக வனக்கோட்டம், கோட்ட வன அலுவலர் அலுவலகத்தில் நேரடி உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 03.12.2018 முற்பகல் பணியில் சேர்ந்து, தற்போது பணிமாறுதலில் திண்டுக்கல் தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் 01.02.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

திரு. எஸ். ஜனார்த்தனன், உதவியாளரின் அரசுப்பணியானது பார்வை 2ல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் அறிவுரைப்படி, பணியில் சேர்ந்த நாளான 03.12.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள் சட்டம்) விதி 2016 பிரிவு 28(1)ன் படி மூன்றாண்டுகளில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். நீவிர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் உரிய தேர்வுகளிலும், பவானிசாகர் நிலைய அடிப்படைப் பயிற்சியும் முடித்தல் வேண்டும்.

மேற்படி பணிவரன்முறையானது, 2017 – 2018 தொகுதி- IIA பணிகளின் நியமனம் குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின், சென்னை மற்றும் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு கட்டுப்பட்டது.

தலைமை வனப்பாதுகாவலர்,
திண்டுக்கல் மண்டலம்,

பெறுநர்

திரு. எஸ். ஜனார்த்தனன், உதவியாளர், தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகம், திண்டுக்கல்.

நகல் - முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்), சென்னை-15-க்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் பணிப்பதிவேடு (தகுதிகாண் பருவத்தினர் தாள் நகலுடன்)

நகல் செயல்முறை ஆணை இருப்புக் கோப்பிற்கு